REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 160

நம் நாடு

தி. மு. கழகத்தின் இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF THE D.P.F.

சென்னை: மார்கழி 2உ வியாழன் (17—12—53) ★ ★ ★ வெளியூர்: மார்கழி 3உ வெள்ளி (18—12—53)

யு. எஸ்.—பாக் இராணுவ ஒப்பந்தம் ஆசியாவிற்கே தீமை பயப்பதாகும்!

—(★)—

'அதற்கு எதிராக பொதுமக்கள் கருத்தை உருவாக்கவேண்டும்'

மாநில காங்கிரஸ் குழுவுகளுக்கு அ.இ.கா. குழு செயலாளர் சுற்றறிக்கை

புதுடெல்லி, டிச. 16—

அமெரிக்காவும் பாகிஸ்தானும் செய்துகொள்ளப் பட்டிருப்பதாகச் சொலலப்படும் இராணுவ ஒப்பந்தத்திற்கு எதிராக பொதுமக்கள் கருத்தை ஒன்று திரட்ட வேண்டுமென்று, அகில இந்திய காங்கிரஸ் குழு செயலாளர், மாநில காங்கிரஸ் குழுவுகளுக்கு ஓர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

அவ்வொப்பந்தத்தின் பயங்கரமான விளைவுகள் பற்றிக் குறிப்பிடும்பொழுது, இந்தியத் துணைக் கண்டத்தையும், தென் கிழக்கு ஆசியாவையும் ஒப்பந்தம் பாதிக்கும் என்றும், ஆசியாவில் உள்ள அரசுகளின் பலாபலத்தைத் தலைகீழாக மாற்றிவிடவும், உலகில் நிகழ்ந்து வரும் நெருக்கடி போரை இந்தியாவின் எல்லைக்கே கொண்டுவந்து சேர்க்கவும் ஒப்பந்தம் துணை செய்கிறது என்றும், அச்சுற்றறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின் எதிரொலியாக பாகிஸ்தான்—இந்தியா நட்புக்கு பாதகம் உண்டாகும்' என்றும் செயலாளர் அறிவித்துள்ளார்.

சர்க்காட்டத்தில் இருந்தோரெல்லாம் நான் வலது அருகிலிருந்த முதலுவர், எனது பழைய சகாக்கள். என்னை 'அப்படிச் செய்யாதே; இருந்த கஷ்டப்படு,' என்கிறார்கள்," என்று பழனியில் நடைபெற்ற காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் ஆச்சாரியார் குறிப்பிட்டார்.

சோவியத் ரஷ்யாவின் புதிய போர்க் கருவி!

திடீரென்று தலைதூக்கித் தாக்கும் 'ராக்கெட்' நீர்மூழ்கிகள்!

பாரிஸ், டிச. 16—

சோவியத் ரஷ்யாவில் புதிய வகையான நீர்மூழ்கிக் கப்பல் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. மேல்நாடுகளுக்குத் தெரியாத ஒரு புது ஆயுதத்தை ரஷ்யா கண்டுபிடித்து இருக்கிறது என ஐ. நா. சபையில் ரஷ்யப் பிரதிநிதி முன்னால் கூறியது, இதைக் குறித்துத்தான இருக்குமென்று பாரிஸ் செய்தி ஒன்று கூறுகிறது.

இந்த ராக்கெட் நீர் மூழ்கிகள், எல்லைப் பாதுகாப்புத் துறையில் புரட்சிகரமான மாறுதலையும், நீருக்குள் பயங்கரத் தாக்குதலையும், அணுக்குண்டு தாக்குதல் எதிர்ப்புப் பாதுகாப்புகளைச் சின்னாபின்னப்படுத்தவும் உதவியாக இருக்கும் என்றும் நம்பப்படுகிறது.

சென்ற போரில் ஜெர்மனியால் உபயோகப்படுத்தப் பட்ட 'யூ போட்'டைக் காட்டிலும் பயங்கரமும், தாக்குதல் வன்மை மிகுந்ததாகவும் இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

மலபார் நெசவாளர் வேலை நிறுத்தம்

பல ஊர்களுக்கும் பரவுகிறது

கண்ணனூர், டிச. 16—

சிரக்கல் பகுதியில் உள்ள கைத்தறிச்சாலைகளில் 10—12—53-ல் துவங்கிய நெசவாளர் வேலை நிறுத்தம், கண்ணனூர் சுற்றுப்புறங்களில் உள்ள அழிக்கோடு, பாலிப்பட்டம், கோவா, அக்காட் முதலிய ஊர்களுக்கும் பரவியுள்ளது.

நெசவாளர்களின் கூலியைக் குறைத்ததே இந்த வேலை நிறுத்தத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. முற்கனவே வாங்கிவந்த கூலியில் ஏறத்தாழ 25 சதவிகிதம் நெசவாளர்களின் கூலியில் குறைவு ஏற்படுத்தியுள்ளனர், தொழிற்சாலை சொந்தக்காரர்கள்,

வீட்டு வாடகை உயர்வை கைவிட முடியாதாம்!

—[o]—

தொழிலாளர்கள் சம்பளத்தில் வாடகை 10 சதவிகிதம்தான் இருக்குமாம்!

பொன்மலை தொழிலாளர் விருப்பத்துக்கிணங்க மந்திரி மறுப்பு!

புதுடில்லி, டிச. 16—

பொன்மலையில் ரயில்வே தொழிலாளர்கள் குடியிருக்கும் வீடுகளுக்கு வாடகையை உயர்த்த வேண்டுமென்று யூனியன் சர்க்கார் முடிவு கட்டியுள்ளது. இந்தச் சர்க்கார் போக்கைக் கண்டிக்கும் முறையில் தொழிலாளர்கள் சென்ற திங்கள் 26-ந் தேதி 30 நிமிடம் அடையாள வேலை நிறுத்தம் செய்யும் இருக்கிறார்கள்.

இதுபற்றி, தோழர் வீராசாமி அவர்கள் கேட்ட கேள்விக்கு, ரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி பதில் தருகையில், வாடகையை உயர்த்த சர்க்கார் கொண்டுள்ள முடிவை மாற்றப் போவதில்லை என்றார், அது பற்றி மறுபடியும் ஆராய வேண்டிய அவசியமும் கிடையாது என்றும் குறிப்பிட்டார்.

வீட்டு வாடகை உயர்த்தும் பிரச்னை குறித்துத் தம்மிடம் சமீபகாலமாக தொழிலாளர் முறையிடப்பட்டதாகவும்.

ஜப்பானில்! இங்கல்ல!

டோக்கியோ, டிச. 15—

புது ஆண்டில் ஜப்பானில் ரூ. 650-க்கு ஒரு டெலிவிஷன் செட் கிடைக்குமாம்; இந்தப் பணத்தையும் இருபது தவணைகளாகக் கொடுக்கலாம்.

இவ்வித டெலிவிஷன் செட்டுகளை மலிவாக உற்பத்தி செய்து விற்பதற்கு ஜப்பானிய சர்க்காரின் தொழில் இலாகா திட்டம் போட்டிருக்கிறது.

களின் வசதிகள் கூடியவிருப்பதாகவும், எனவே, வாடகையை உயர்த்தும் திட்டத்தைத் திரும்பவும் பரிசீலிக்க வேண்டிய அவசியம் கிடையாது என்றும் மந்திரி குறிப்பிட்டார்.

இதுபற்றி துணை அமைச்சர், இந்த வாடகை உயர்வானது பாட்டாளி பெறும் ஊதியத்தில் 10 சதவிகிதம்தான் இருக்கும் என்று கூறினார்.

ஏடுகள் போக்கும்—நோக்கும்?

★

'அசெம்பிளியில் திராவிட பார்லிமெண்டரி கட்சி'
"பெயர் மாற்றமே யொழிய கழகங்களுடன் சம்பந்தமில்லை."
—'சு. மி.' தலைப்பு
16—12—53.

'கழகங்களுடன் உறவு இல்லை'
"திராவிட சட்டசபைக் கட்சித் தலைவர் விளக்கம்"
—'தினமணி' தலைப்பு.
17—12—53.

'தி. மு. கழகத்துடன் எங்கட்குத் தொடர்பில்லை'
"சட்டசபை திராவிடக் கட்சி அறிவிப்பு"
—'தினத்தந்தி' தலைப்பு.
17—12—53.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 17—12—53 வியாழன்

பொருந்தாப் பொய்யுரை!

திருசிபுரத்துக்கும் விழுப்புரத்திற்கும் இடையில் உள்ள குறுக்கு இருப்புப்பாதையில் கல்லக்குடி என்ற சிற்றூர் இருக்கிறது. அதன் நிலப்பரப்பின் வழியாக மேற்குறித்த இருப்புப்பாதை செல்லுகிறது. கல்லக்குடி என்ற சிற்றூர் பகுதியில் உள்ள புகை வண்டி நிலையத்திற்கு அந்த ஊர் பெயரை இடுவதுதான் முறை—நியாயம். இதை விடுத்து அந்த ஊர் நிலப்பரப்பில் குறிப்பிட்ட ஒரு சிறு பகுதியில் ஒருவர் ஒரு தொழில் நிலையம் வைத்திருக்கிறார் என்பதற்காக, அவர் பெயரையே அவ்வூர் புகை வண்டி நிலையத்திற்குச் சூட்டுவது என்பது கொஞ்சமும் பொருத்தமுடையதாகாது இதிலுள்ள முறைகேட்டைச் சாதாரண மக்களாலும் புரிந்து கொள்ள முடியும். எனவே, இந்த அக்கிரமத்தை ஆச்சாரியார் அமைச்சர் குழு புரிந்து கொள்ளாமல் இருக்க ஒரு துளி நியாயமும் கிடையாது.

கல்லக்குடி என்று அப் புகைவண்டி நிலையத்திற்குப் பெயரிட வேண்டியது நியாயமாக இருக்க, அந்தப் பெயரை இடாமல் போனது அக்கிரமம். அதற்கு ஒரு வடநாட்டாரான டால்மியாவின் பெயரை வைத்திருப்பது அதைக் காட்டிலும் இரட்டை அக்கிரமமாகும். ஒரு காரியத்தை, செய்ய வேண்டியதைச் செய்யாமல் கெடுப்பதும், செய்யக் கூடாததைச் செய்து கெடுப்பதும், ஆகிய இரு கேடுகளை, அன்று இருந்த ஆச்சாரியார் சர்க்காரும், வெள்ளை மத்திய சர்க்காரும் செய்து இருக்கிறது.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக இந்தப் பெயர் மாறாட்டம் கவனிப்பாரற்றே இருந்து வந்திருக்கிறது. இதை மாற்றி அமைக்க வேண்டும் என்று நமது தி. மு. கழகம் முதல் முதலாக முயற்சி எடுத்துக்கொண்டது.

இம் மாற்றத்திற்கான பொதுமக்கள் கருத்தைத் திரட்டும் பெரும் பணியில் சில திங்கள் ஈடுபட்டது. தொடர்புடைய சர்க்கார் அதிகாரிகளுக்கு பெயர் மாற்றத்தின் அவசியத்தையும், இடப்பட்டுள்ள பெயரால் மாசுபடும் தன்மான உணர்ச்சியையும் சுட்டிக் காட்டி கோரிக்கை அனுப்பியது இதுவன்றி, அவ்வூர் பஞ்சாயத்து ஆட்சி மன்றமும், திருச்சி மாவட்ட ஆட்சி மன்றமும், வேறு பல ஆட்சி மன்றங்களும், தீர்மானம் நிறைவேற்றி அரசியலாருக்கு அனுப்பி வைத்தன. அப்பெயர் சூட்டுவதற்குக் காரணஸ்தர்களாக இருந்த வெள்ளை அதிகாரிகளைப் போலவே, அடக்காரர்களாக காங்கிரஸ் ஆட்சியாளர்களும் இருந்துவிட்டனர்.

காங்கிரஸ் சர்க்காரின் அலட்சியப் போக்கு கண்ட நமது தி. மு. கழகம் அறப்போராட்டத்தைத் துவங்கியது ஆச்சாரியார் சர்க்காரும் அடக்குமுறையைத் துவங்கிற்று; இரு உயிர்களை பலி கொண்டது. பலரை அங்கயீனர்களாக ஆக்கிற்று. பலரை சிறைக்கனுப்பியது. இன்னும் சிலர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டு விசாரணையில் இருந்தும் வருகிறது. நிற்க,

இது பற்றி இரண்டு தினங்களுக்கு முன்பு சென்னை சட்டசபையில் கேள்விகள் கிளம்பின. இதற்கு பதில் கூற முனைந்த நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர் அவர்கள் பொருந்தாப் பொய்கூறி, பிரச்னையின் முக்கியத்தை குறைக்கப் பார்த்திருக்கிறார்.

அதாவது, தனி நபர்களும், திராவிட முன்னேற்றக் கழகமும், நகராட்சி மன்றங்களும், பஞ்சாயத்து நிறுவனங்களும், வேறு அமைப்புகளும், 'டால்மியாபுரம்' என்ற பெயரை மாற்றி, 'கல்லக்குடி' எனப் பெயரிடவும், அஞ்சல நிலையத்திற்கு அதே பெயரிடவும் வேண்டுமென்றும் தமக்கு அறிவித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்குப் பதில் தருவது என்ற முறையில், கல்லக்குடி என்ற நிலப் பகுதியில் உள்ள ஒரு சிறு பட்டிக்குத்தான 'டால்மியாபுரம்' என்று பெயரிடப்பட்டு இருப்பதாகவும், எனவே, அந்த நிலப்பரப்பின் பெயர் முழுதும் மாற்றப்படாமல் எப்பொழுதும்போல் கல்லக்குடி என்று இருப்பதால், அதற்கு எந்தவித நடவடிக்கைக்கும் அவசியம் கிடையாது என்றும் அதே அமைச்சர் அறிவித்துள்ளார்.

புகை வண்டி நிலையம், அஞ்சல் நிலையம் ஆகிய இரு இனங்களிலும் பெயர் மாற்றம் செய்வது பற்றிய அதிகாரம் யூனியன் சர்க்காருக்குத் தான் உண்டு என்றும் அவர் கூறி இருக்கிறார்.

இந்தப் பெயர் மாற்றம் பற்றி, சென்னை சர்க்காரின் கருத்தை அறிய யூனியன் சர்க்கார் இதுவரை முயற்சிக்கவில்லை என்றும், அதற்கு சென்னை சர்க்கார் பதில் ஒன்றும் அனுப்பவில்லை என்றும் அதே அமைச்சர் மழுப்பியும் இருக்கிறார்.

கல்லக்குடி நிலப்பரப்பில் உள்ள ஒரு சிறு பட்டிக்கு 'டால்மியாபுரம்' என்று பெயரிடுவதா இல்லையா என்பதைப் பற்றியதல்ல இப்பொழுது கிளம்பியுள்ள பிரச்னை. கல்லக்குடி நிலப்பரப்பில் உள்ள புகைவண்டி நிலையத்திற்கு டால்மியாபுரம் எனப் பெயரிடப்பட்டிருப்பதை, கல்லக்குடி என மாற்ற வேண்டும் என்பதுதான் இப்பொழுது கிளம்பியுள்ள பிரச்னை.

ஆட்சி மன்றங்களின் தீர்மானமும், நமது தி. மு. கழகத்தின் அறப்போராட்டமும், இந்தப் புகை வண்டி நிலையப் பெயர் மாற்றத்திற்குத்தான் என்பதை எல்லோரும் அறிவர். இந்த உண்மை நிலவரி அமைச்சருக்கும் தெரியும். கோரிக்கையை வெளியிடும் கட்டத்தில் நமது கழகம் இருந்தபொழுது ஒரு வேளை, நமது விருப்பத்தைப் புரிந்துகொள்ளாத நிலையில் இதே அமைச்சர் இருந்திருந்தாலும் இருந்திருக்கக் கூடும். தம்மை ஒரு அமைச்சராகக் கொண்டுள்ள ஆச்சாரியார் சர்க்கார் ஏவிய அடக்குமுறை, இரண்டு உயிர்களை பலி கொண்ட பிறகும்கூட பெயர் மாற்றப் பிரச்னையின் உண்மையை, நிலவரி அமைச்சர் அறிந்து கொள்ளாமல் இருக்கிறார் என்று எவர்தான் நம்பமுடியும்?

மாணிக்கவேலர் அவர்களுடைய குட்டி சர்க்காருக்கு, புகைவண்டி நிலையப் பெயர் மாற்ற விஷயத்தில் எவ்வளவு உரிமை உண்டு என்பதை அமைச்சர் அறிந்திருப்பதைவிட நமது கழகத்தில் உள்ள சாதாரண உறுப்பினர்கூட அதிகம் அறிந்திருப்பவர் என்பதை அமைச்சர் அறிந்திருப்பது நல்லது.

இந்த அமைச்சரிடம் பெயர் மாற்றக் கோரிக்கையை வெளியிட்டது, இவரை, டெல்லிக்கு அனுப்பும் ஒரு 'தபால் பெட்டி'யாக, கோரிக்கையைக் கொடுத்தவர்கள் நன்கு அறிந்து கொண்டு இருப்பதினாலேயேயாகும்.

இந்தப் பெயர் மாற்றம் பற்றி இப்பகுதியினர் கொண்டுள்ள அடங்கா அவாவை, டெல்லி தேவதைக்கு அறிவிக்கும் வெறும் 'கோரிக்கை சர்க்காரா'க சென்னை சர்க்கார் இருக்கிறது என்பதையும் தெரிந்திருக்கின்ற காரணத்தால்தான், தங்கள் விருப்பத்தை சென்னை சர்க்காருக்குக் கொடுத்தனர், பெயர் மாற்றம் விழைந்தவர்கள்.

குடகுப் பெண் தனலட்சுமி

அரசியல் பகையை தீர்த்துக்கொள்ள அவர் சூத்திரக் கயிறான விந்தை!

மெர்க்காரா, டிச. 15—

குடகு தனலெட்சுமியின் மாபெரும் பித்தலாட்டத் திரை பெங்களூர் சிவில் சர்ஜன் அவர்களால் கிழித்தெறியப்பட்டதின் விளைவாக, மக்களை ஏமாற்ற கிளப்பி விடப்பட்ட இந்தப் புரட்டின் அஸ்திவாரம் யாது, உண்மை நிலையென்ன, என்பது குறித்து இங்குள்ளோர் விசாரணை செய்தவாறு உள்ளனர்.

இந்தப் புரட்டு பற்றிய விளக்கங்களில், பலரால் பேசிக் கொள்ளப்படுவது கீழே குறிப்பிடப்படுகிறது:—

'இந்த மாநிலத்தில் காங்கிரசின் அரசியல் வைரியாக விளங்கும் சிவில் சர்ஜனை இழிவுபடுத்தும் உள்நோக்கத்துடன், ஆளும் கட்சியினரால், தோற்றுவிக்கப்பட்டவரே இவ்வதிசயப் பெண்' என்று கூறப்படுகிறது.

இந்தச் சிறிய மாநிலம் தனி நிர்வாக அமைப்பாய் இயங்க வேண்டுமா, அல்லது சூழ்ந்திருக்கும் கன்னடத்துடன் இணைக்கப்பட வேண்டுமா என்ற பிரச்சினையின் மீது நடந்த பொதுத் தேர்தலில் கட்சிப் பிரதி கட்சிகள் போட்டியிட்டன.

காங்கிரசார் இணைப்பை ஆதரித்தனர். முன்னாள் காங்கிரசாருடைய எதிர்ப்பு அணியான 'குடகுக் கட்சி' இணைப்பை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிட்டது.

காங்கிரஸ் கட்சிக்கு 15 ஸ்தானங்களும், குடகுக் கட்சிக்கு 9 ஸ்தானங்களும் கிடைக்கவே, காங்கிரஸ் ஆட்சிபீடம் ஏறியது.

இணைவதா, தனித்து இயங்குவதா என்ற அடிப்படையின் மீது, காங்கிரசை எதிர்த்தவரில் ஒருவர் டாக்டர் டி. பி. மேடப்பா. தேர்தல் முடிந்த பின்னர், மெடிகல் சர்வீசில் சேர்ந்து மெர்க்காரா ஆஸ்பத்திரியில் சிவில் சர்ஜனாக நியமனம் பெற்றார்.

அதன்பின், பொதுவாகக் காங்கிரஸ் தலைவர்கள்; குறிப்பாக உள்நாட்டு அமைச்சர் மல்லப்பா தங்கள் பகைமை உணர்ச்சியை வளர்த்த வண்ணம், அவரைப் பதவியிலிருந்து நீக்க முயற்சி எடுக்கத் தொடங்கினர்.

'மேடப்பா தகுதியில்லாத வைத்தியர்' என்ற முடிவுக்கு மக்கள் வரவேண்டும்; இந்தத் தீர்ப்புக்கு ஆளாக்கப்பட வேண்டுமென்ற தந்திரத்திலிறங்கினர்; எனவே, குண்டிகுட்டி மஞ்சுநாதய்யா என்ற பெயருடைய காங்கிரஸ் எம் எல் ஏ ஒருவருடைய காபி எஸ்டேட்டில் குமாஸ்தாவாகயிருக்கும் தனலட்சுமியின் தந்தையைத் தேடிப்பிடித்தனர். திட்டப்படி, தற்கால வைத்திய சாஸ்திரத்துக்கு அறைகூவல் கூறியவாறு தனலட்சுமி 'அதிசயப் பெண்'ணாக மாற்றப்பட்டு, பரீட்சிக்கப்பட மெர்க்காரா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்

முதல் நாளன்றே, பூர்வாங்க பரிசோதனை முடிந்ததும், தனலட்சுமி தனியாக ஏகாந்தமான வார்டில் வைக்கப்படவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார். தனலட்சுமியைப் போன்ற வயதுப் பெண்ணைத் தனிமையில் வைக்கும் நோக்கத்தை அதிகாரிகள் ஏற்க மறுத்தனர் என்று கூறப்படுகிறது. அவர்கள் தலையீடு தனலட்சுமியின் உறவினர், தனலட்சுமியை சந்தித்துக் கொண்டிருக்கும் வாய்ப்பை உண்டாக்கியது

அந்தப் பெண்ணின் சரீர உறுப்புகளில் அசாதாரணம் ஏதும் இருப்பதாகப் பரிசோதனைகளால் தெளிவுபடவில்லை, தமது முடிவுகளை எழுத்து மூலம் கொடுக்க வேண்டுமென்று. சிவில் சர்ஜனை சர்க்கார் நிர்ப்பந்தித்தது சிவில் சர்ஜன் அதற்கு மறுத்து விட்டாரென ஓர் செய்தி கூறுகிறது.

மேடப்பா அவர்களின் தீர்ப்பு பெங்களூர் சிவில் சர்ஜனுக்குத் தெரிந்ததே. எனவே தனலட்சுமியை பெங்களூர் ஆஸ்பத்திரியில் தனிமையில் வைக்கக்கூடாது என்ற தந்திரோபாயத்திற்கு அவர் கீழ்ப்படியவில்லை. அதுமட்டுமின்றி, குடகு சர்க்காரின் ஜம்பம் பெங்களூரில் செல்லுபடியாகாது. எனவே 24 மணி நேரத்திற்குள் திரை விலக்கப்பட்டு உண்மை நிலை வெட்ட வெளிச்சமாக்கப்பட்டு விட்டது. கட்சி மனப்பான்மை கொண்ட சிலருடைய விருப்பத்துக்கும் சுய லாபத்துக்கும் உடந்தையாக, பல்லோரை ஏமாற்றும் கபட நாடகத்தைத் தொடர்ந்து நடத்த இயலாதவகையில், தனலட்சுமியின் வஞ்சகத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

பிரமிக்கத் தக்கவாறு பகிரங்கப்படுத்தப்பட்டவுடன், குடகு மக்களை பெங்களூர் டாக்டர்கள் அவதூறு பேசி விட்டார்களென்று. காட்டிய, பராளுமன்ற உறுப்பினரான உள்ளூர் காங்கிரஸ்வாதி தோழர் சோமண்ணா, குற்றஞ் சாட்டியிருப்பது விசேட அர்த்தபுஷ்டியுடையதாகத் தோன்றுகிறது.

[டிச 12-ல், 'பிளிட்ஸ்' பத்திரிகையில் வெளியான செய்தியின் சாரம்.]

கழகக் கூட்டங்கள்

★

பொள்ளாச்சி

20—12—53 ஞாயிறு மாலை

இடம்:—தேர்நிலை வெளியில்

பேச்சாளர்:

ஈ. வி. கே. சம்பத்

★

திருப்பாபுலியூர்

20—12—53 காலை 9 மணிக்கு

இடம்: வண்டிப்பாளையம் ரோடு

தலைவர்:

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.

பேச்சாளர்கள்:

ஆர். பலகுருசாமி, கவிஞர் வாணிதாசன், சுந்தரராசு எம்.சி., அருணாசலம், எம். சி., சுந்தரம், எம். சி., சுப்ரமணியம், எம். சி., சித்தார்த்தன், பி. ஏ., கே. ஜி. சாமிநாதன், ஏ. எஸ். ராமச்சந்திரன், புதுவை வாணன், சி. என். தம்பிதுரை, வி. தணிகாசலம்.

தூத்துக்குடியில் 65-வது திருவிளையாடல்!

பச்சிளங் குழந்தையை பன்றி தின்ற வேதனை!

தூத்துக்குடி, டிச. 14—

முத்துவீர் என்ற நகரசுத்தி தொழிலாளப் பெண், ஒரு பச்சிளங் குழந்தையின் மாமிசத்தை பன்றி ஒன்று தின்றுகொண்டிருப்பதைக் கண்டு அருகில் சென்று பன்றியை விரட்டினாள்; நடாயில்லை; அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் ஓடி வந்தனர். பன்றி அந்த மாமிசத் துண்டை தூக்கிக் கொண்டு ஓட ஆரம்பித்தது.

அதன் பிறகு அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்ததில் அங்கே முழு வளர்ச்சி பெற்ற குழந்தை புதைத்திருக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. அதுபற்றி போலீசார் நடத்திய பிரேத விசாரணையில், அது யாரோ ஒரு பெண், கள்ள நட்பினால் பிறந்த குழந்தையைப் புதைத்திருக்கிறாளென கருதினர். போலீசார் வழக்குப் பதிவு செய்தனர்.

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

30, 31-வது சாட்சிகளின் வாக்குமூலம்

திருநெல்வேலி, டிச. 14—
ஸ்பெஷல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் முன்பு, தூத்துக்குடி கலவர வழக்கு விசாரணை இன்று மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

30-வது சாட்சி

பிராசிக்யூஷன் தரப்பில் 30வது சாட்சியான ராமசாமி அய்யர் கூறியதாவது:—

“சேலூரிலிருந்து மேலூருக்கு போகும் ரயில் பாதைக்கு மேற்கே கிழக்கு மேற்காக உள்ள கனக சபாபதி பிள்ளைத் தெருவில் நான் வசிக்கிறேன்; என்னுடைய வீடு மேற்கு பார்த்திருக்கிறது (ஜூலை 15-ந் தேதியன்று மேலூர் ரயில்வே ஸ்டேஷனில் நடந்த சம்பவங்களைப் பற்றியும், போலீசார் சுட்டது பற்றியும் சாட்சி தெரிவித்தார்) போலீசாரின் எச்சரிக்கையைப் பற்றி நான் கேள்விப்பட்டவுடனே பயந்து, அப்பால் போய் விட்டேன்; சில நிமிஷங்களுக்குப் பிறகு அப்பாக்கிக் குண்டுகள் வெடிக்கும் சப்தம் கேட்டது. ஏறக்குறைய இருநூறு பேர்கள் அடங்கிய ஜனக்கூட்டம் வருவதை நான் பார்த்தேன்; காலை 9 மணிக்கு நான் என்னுடைய தோல் கடைக்குப் போனேன்; மேல் கிரேட் காட்டன் ரோடில் சில கடைகள் மூடியிருந்தன; கருப்புச் சட்டைக்காரர்கள் சிலர் வந்து கடைகளை மூடும்படி நிர்ப்பந்தித்திருக்க வேண்டுமென்று நான் அறிந்தேன்; என்னுடைய கடைகளில் அக்கவுண்டெண்டும், வேலைக்காரப் பையனும் இருந்தார்கள்; 10 மணி சுமாருக்கு மேலகிரேட் காட்டன் ரோட் வழியாக சுமார் இருபது பேர்கள் கொண்ட கூட்டம் ஒன்று வருவதைக் கண்டேன்; இவர்களுக்கு முன்னதாக சைக்கிள்களில் இருவர் வந்துகொண்டிருந்தனர்; இவர்கள் என்னுடைய ஷாப் முன்பாக நின்றனர்; பிறகு ஒரு கூட்டம் வந்தது; அவர்களிடம் கழிகளும், விறகுக் குச்சிகளும் இருந்தன; அவர்களும் என் கடை முன்பாக நின்று முன்புறத்தில் இருந்த தனியே எடுத்துவிடக் கூடிய ஒரு அலமாரியை உடைத்து விட்டனர்; 3, 4 பேர்கள் கடைக்குள் நுழைந்தனர்; அவர்கள் மேஜை மீதிருந்த சாமான்களை எடுத்து எறிந்தனர்; சுவற்றில் மாட்டப்பட்டிருந்த சில தேசியத் தலைவர்களின் படங்களை இவர்கள் உடைத்தனர்; ‘ஏன் இப்படியெல்லாம் செய்கிறீர்கள்?’ என்று நான் கேட்டேன்; உடனே வெளியே இருந்த கூட்டத்திலிருந்த ஒருவர், ‘இவர் ஒரு பிராம்மணர்; இவரை வெட்டு’ என்று சொன்னார்; என்னுடைய அக்கவுண்டெண்ட் ஒரு முஸ்லீம்; கடையிலிருந்து வெளியேறும்படி எல்லோரையும் அவர் நயந்து கேட்டுக்கொண்டார்; பிறகு கூட்டம் கடையிலிருந்து போய்விட்டது; பிறகு நான் கடையை மூடிக்கொண்டு வீட்டிற்குப் போனேன்; என்னுடைய வீட்டிற்கு ஐந்தாவது வீட்டில் எனது நெருங்கிய உறவினர்கள் வசிக்கிறார்கள்; இவ்வீடு சேதப்படுத்தப்பட்டது; அவ்வீட்டிலுள்ளவர்கள் சென்றார்கள்; கைகளில் கழிகள்; விறகுக் குச்சிகளுடன் கிழக்கே இருந்து சுமார் 20 பேர் கொண்ட கூட்டமொன்று வருவதை நான் பார்த்தேன்; இவர்கள் எல்லா வீடுகளின் கதவுகளையும் தாக்கிக்கொண்டே வந்தனர்; கதவுகள் மூடப்பட்டிருந்தான் இருந்தன; மூடப்பட்டது மட்டுமின்றி தாழ்ப்பாளிடப்பட்டும் இருந்தன; என் வீட்டின் கதவையும் கூட்டத்தினர் தாக்கினர்; இவற்றையெல்லாம் நான் பார்த்தேன்; என் வீட்டு மாடியில் நான் நின்றுகொண்டிருந்ததால், இவற்றையெல்லாம் காணமுடிந்தது; என் வீட்டிற்கு எதிர் வீட்டில் வசிக்கும் எண்ணெய் வியாபாரியான சக்கபிள்ளை என்பவரும் இவற்றையெல்லாம் பார்த்தார்; ‘கூட்டத்தினர் ஏன் இந்த மாதிரி வீடுகளைத் தாக்கி கற்களை வீசுகிறார்கள், தெரியவில்லையே,’ என்று நான் சக்கபிள்ளையிடம் கூறினேன்; ‘அவர்களைத் தெருவிலிருந்து துரத்திவிட வேண்டும்; கொஞ்சம் உதவிக்கு வாருங்கள்,’ என்று அவரை அழைத்தேன்; நான்கு, ஐந்து பேர்களை அழைத்துக் கொண்டு அவர் வந்தார்; அவர்களிடம் தடிகள் இருந்தன; என் கையில் ஒரு அரிவாளை எடுத்துக் கொண்டேன்; எல்லோருமாகத் தெருவில் போனோம்; இரண்டாவது தெப்பக்குளம் சந்திலிருந்து கனகசபை பிள்ளைத் தெருவை நோக்கி சுமார் இருபது பேர்கள் அடங்கிய கூட்டம் ஒன்று வருவதை நாங்கள் பார்த்தோம்; அவர்களிடம் கழிகளும், கற்களும் இருந்தன; அவர்கள், என்மீதும், மற்றவர்கள் மீதும் கற்களை வீசினர்; முதல் தெப்பக்குளம் சந்திலிருந்து சுமார் நான்கு பேர்கள் வந்து எங்களுடன் சேர்ந்து கொண்டனர்; நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து முக்கியக் கூட்டத்தை நோக்கிச் சென்றோம்; கையில் அரிவாளுடன் நான் முன்னால் போனேன்; பிறகு கூட்டம் கலைந்துவிட்டது; நானும், என்னைச் சேர்ந்தவர்களும் சுமார் அரை பர்லாங்கு தூரம் கூட்டத்தினரைத் துரத்திச் சென்றோம்; ரயில்பாதையில் உள்ள ஒரு கேட் வழியாகக் கூட்டத்தினர் தப்பியோடி விட்டார்கள்; பிறகு, நானும், என்னைச் சேர்ந்தவர்களும் எங்களுடைய வீடுகளை அடைந்தோம்.”

பிறகு சாட்சி, எழுபதாவது எதிரியை கூட்டத்திலிருந்தவர் என்று அடையாளம் கண்டுபிடித்துக் கூறியதாவது:—

“அவர்தான் என்னுடைய கடைக்குள் நுழைந்தார்; 63-வது எதிரி ஆறுமுகநாடாரும், 61-வது எதிரி சக்திமுத்துவும் நாங்கள் துரத்திச் சென்ற கூட்டத்தில் இருந்தனர்.”

‘அன்று, போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அழைத்துச் சென்றார்; சுமார் ஒன்றரை மாதங்களுக்கு முன்பு தூத்துக்குடி சப்-மாஜிஸ்திரேட் முன்பு நடந்த அடையாள கண்டுபிடிப்பு அணிவகுப்புக்கு நான் அழைத்துச் செல்லப்பட்டேன்; 1920-ம் ஆண்டு முதல் நான் காங்கிரஸ்காரனாக இருந்து வருகிறேன்; சென்ற ஆறு ஆண்டு காலமாக கௌரவ மாஜிஸ்திரேட்டாக இருந்து வருகிறேன்.”

‘எனக்கு லட்ச ரூபாய்க்குச் சொத்துக்கள் இருக்கிறது; வியாபாரம் இருந்து வருகிறது; ஆனால் நிலம் எதுவும் கிடையாது.”

பிராசிக்யூட்டரின் ஒரு கேள்விக்கு சாட்சி பதில் அளிக்கையில் கூறியதாவது:—

திரு. சொக்கலிங்கப் பிள்ளையினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:—

‘சம்பவ தினத்தன்று நடந்த எல்லா சேதங்களும் கருஞ்சட்டையினரால் செய்யப்பட்டது; கலவரமும் கருஞ்சட்டையினரால் ஏற்பட்டது; கருஞ்சட்டைக் கோஷ்டியினரை எனக்கு 6, 7 ஆண்டுகளாகத் தெரியும்; கருஞ்சட்டையினரின் தலைவர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர்; சி. என். அண்ணாதுரையைத் தலைவராகக் கொண்ட போட்டிக் கட்சியையும் எனக்குத் தெரியும்; சம்பவம் நடந்த தினத்தன்று 5-வது எதிரி வெள்ளை ஷர்ட் அணிந்திருந்ததைப் பார்த்தேன்; திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இவற்றைச் சேர்ந்த பல அங்கத்தினர்கள் கருப்புச் சட்டைகள் அணிந்திருந்தனர்; என்னுடைய வியாபாரத்தை நடத்த என்னிடம் பர்மிட்டோ, லைசென்சோ கிடையாது; பர்மிட்டோ, லைசென்சோ அவசியமில்லை: எனக்கு ஒரே ஒரு வீடுதான் இருக்கிறது; சென்ற ஆறு ஆண்டுகளில் வாங்கின வீடு அது; 1942-ம் ஆண்டு முதல் நான் வருமான வரி செலுத்தி வருகிறேன்.”

மேலும் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு சாட்சி கூறியதாவது:—

“கொள்கையில் திராவிட, திராவிட முன்னேற்றக் கழகங்களுக்கு காங்கிரஸ் விரோதமானது; 1-வது எதிரியும் 5-வது எதிரியும் தூத்துக்குடியில் முக்கியமான கருஞ்சட்டைத் தலைவர்கள்; தூத்துக்குடியில் இந்தக் கட்சிகளுக்கு எத்தனை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது; ஆயிரம் பேர்கள் இல்லை என்று எனக்குத் தெரியும்; எட்டயபுரம் ரோடில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆபீஸ் இருக்கிறது; ஒரு வாசகசாலையும் இருக்கிறது; ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்பதை நான் அறிவேன்; மேற்படி திட்டத்தை இன்னும் சில கட்சிகளும் எதிர்க்கின்றன; காங்கிரஸ்காரர்களில் கூட சிலர் அதை எதிர்க்கிறார்கள்; என்னுடைய கடையில் சம்பவங்கள் நடந்தது சுமார் 15 நிமிடங்களிருக்கும்.”

தான் வைத்திருந்த அரிவாளை, சாட்சி, சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் காட்டிவிட்டுக் கூறியதாவது:—

இதற்கு முன்னர் எப்போதும் தற்காப்புக்காக நான் அரிவாளை உபயோகித்ததில்லை; தேங்காய்களுக்காகவே நான் அதை உபயோகித்திருக்கிறேன்.”

திரு. பி. ஏ. தங்கசாமியினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:—

“நான் முன்பு டவுன் காங்கிரஸ் கட்சி அங்கத்தினனாயிருந்தேன்; ஆனால், இந்த ஆண்டு இல்லை; சம்பவம் நடந்ததற்குப் பிறகு, விசாரணை செய்த தகவல் அறியும் கமிட்டி முன்பு நான் சாட்சியம் கூறினேன்; அசெம்பிளியில் கேள்விகள் கேட்கப்பட்டது எனக்குத் தெரியும்.”

திரு வி. என். கந்தய்யாவினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:—

“பெஞ்ச கோர்ட் அங்கத்தினர்களில் நான் ஒருவன்; சப்-கலெக்டர் ஆபீசுக்கு சமீபமாக உள்ள போலீஸ் ஸ்டேஷன் மாடியில் பெஞ்ச கோர்ட் இருக்கிறது; கோர்ட்டுக்குக் கீழே சப்-ஜெயில் இருக்கிறது; கக்ஷிகளுக்குப் போவதற்காக ஜெயிலிலிருந்து கைதிகள் வெளியே வருவதை நான் பார்த்ததேயில்லை.”

சாட்சியை திரு. ஆர் தண்டபாணி குறுக்கு விசாரணை செய்தார். அப்போது கூறியதாவது:—

“நான் காங்கிரஸ்காரன்; அஹிம்சையில் நம்பிக்கை கொண்டவன்; புதுக்கிராமத்தில் திராவிடக் கழகத்தினரை பிராமணர்கள் பகைக்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது; ஆனால், புதுக்கிராமம் பிராமணர்களுடன் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பல இடங்களில் நடவடிக்கைகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.”

31-வது சாட்சி

31-வது சாட்சியாக தேவஇறக்கம் விசாரிக்கப்பட்டார் அவர் கூறியதாவது:—

‘நான் முன்னாள் ரேஷன் அதிகாரி; ஜூலை 15-ந் தேதியன்று நான் புதுக்கிராமம் கோதண்டராமய்யர் வீட்டிற்குப் போய், உள்ளே அவருடன் பேசிக்கொண்டிருந்தேன்; தெருவில் ஏதோ சத்தம் ஏற்பட்டது; என் காதில் விழுந்தது; வீட்டிற்கு வெளியே என் சைகிளை விட்டிருந்தேன்; கூட்டத்தினர் தெருக்குள் வந்தவுடனே யாரோ ஒருவர் வீட்டுக் கதவுகளை மூடினார்; சிறிது நேரத்திற்குப் பிறகு நான் வீட்டிற்கு வெளியே வந்தபோது வெளியே இருந்த சைகிளைக் காணவில்லை; பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்.

இத்துடன் இன்றைய விசாரணை முடிந்தது.

விற்பனைக்குத் தயார்!

எமது புதிய வெளியீடுகள்

கருணாவின் கருத்தோவியங்கள்

★

சிறைச் சோலையில் பூத்த மலர்கள்!
திராவிடப் பண்ணை தரும் தேன் விருந்து!!
தமிழன்னைக்குக் கலைஞர் சூட்டும் தங்கமகுடம்!!!

★

★ இரத்தக் கண்ணீர் (நாடகம்) 2-0-0
நாடகவேந்தர் மு. கருணாநிதியின் புதிய கற்பனை பொன்னின் ஒளி வீசும் எழுத்தோவியம். தெவிட்டாத தெள்ளமுதம்.

★ ஆறு மாதக் கடுங்காவல் 2—0—0
திராவிடர் வரலாற்றுக்குத் துணை புரியும் கல் ஏடு. கருணாநிதியாரின் கல்லக்குடிப் போராட்டக் குறிப்புகளும், சிறை வாழ்வின் வர்ணனைகளும் அடங்கிய சித்திரச் சுவடி. கருணாநிதி எழுதியது.

★ முத்தாரம் (கவிதை) 1—0—0
புரட்சி எழுத்தாளர் கருணாவின் பேனாமுனை எழுப்பும் புதிய முறை. ஆம்; கற்பனைக்கே புதிய வழி காணுகிறார், இந்த நூலின் மூலம். அறிஞர் உலகும், இளைஞர் உலகும் சுவைத்துப் பயன் காணும் அறிவுச் சோலை.

திராவிடப் பண்ணை,
தெப்பக்குளம் — திருச்சி.

குடியரசு கட்சியின் சொத்து பறிமுதல்?

தற்கால ஆட்சியினரின் விபரீதப் போக்கு!

அங்காரா, டிச. 14—
துருக்கியில் ஆட்சி புரிந்து வரும் ஜனநாயகக் கட்சியினர் கடந்த 25 ஆண்டுகளாக,—ஒரே கட்சி முறையைப் பின்பற்றி ஆட்சி பொறுப்பில் இருந்துவந்த குடியரசுக் கட்சியின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டுமென்ற ஒரு மசோதாவை துருக்கி தேசிய சட்டசபையில் நிறைவேற்றியுள்ளனர். சாதகமாக 341 வாக்குகளும், பாதகமாக 5 வாக்குகளும் கிடைத்தன.

ஒரு கட்சிமுறை ஆட்சியின் விளைவாக, குடியரசுக் கட்சியினர் கடந்த 25 ஆண்டுகளாக, ஒழுங்கீனமான முறையில் 20 கோடி துருக்கி பவுன்கள் கட்சிக்காகச் சேமித்துள்ளனர் என்று ஜனநாயகக் கட்சியினர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இதை மறுத்து, தங்கள் கட்சியின் கணக்குகளை ஒரு கமிஷனிடம் காட்டத் தயார் என்று குடியரசுக் கட்சியினர் அறிவித்துள்ளனர்.

இந்தப் பறிமுதல் மசோதா வந்ததும், இதை எதிர்க்கும் வகையில் 52 குடியரசுக் கட்சியைச் சார்ந்த சட்டசபை உறுப்பினர்கள் கூட்டத்தில் இருந்து வெளியேறிவிட்டனர்.

கைத்தறியாளர் வேலை நிறுத்தம்

கூலி குறைப்பே காரணம்

கண்ணனூர், டிச 15—
சிறக்கல் ‘அம்சத்திலுள்ள’ 3 நெசவுத் தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளர்கள், டிச. 11-ந் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்துவருகிறார்கள். தங்களின் சம்பளம் குறைத்தது குறித்து எதிர்த்தே அவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர் என்று தெரியவருகிறது.

24 கெஜத்திற்கு, தற்போது கூலி ரூ 4—4—0 ஆக இருந்து வருகிறது ஒரு ஆண்டிற்கு முன் ரூ. 6—0—0 ஆக இருந்தது. கைத்தறித் தொழிலில் ஏற்பட்டுள்ள ‘மந்தமே’ இவ்வாறு சம்பளக் குறைப்புக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

திருமணங்கள்

விருதைத் தோழர் இராசமாணிக்கம் பி. ஏ., ([illegible]) அவர்களுக்கும், தோழியர் இராசம்பாளுக்கும் விருதையில் மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற்றது. ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிக்கப்பட்டது —வரவேற்கிறோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

சத்தியபூமான்—சுலோசனா

குல்லக்குண்டில் 9-12-53ல், காலை 10 மணியளவில் திண்டுக்கல் கே. வேலாயுதம் அவர்களின் புதல்வர் தோழர் கே. வி. சத்தியபூமான் அவர்களுக்கும், குல்லக்குண்டு கருப்பையா நாடார் அவர்கள் புதல்வி தோழியர் சுலோசனா அம்மையாருக்கும் மணமகன் தந்தை கே. வேலாயுதம் அவர்களின் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பல தோழர்களால் மணமக்களுக்கு வாழ்த்து மடலும், பரிசுகளும் வழங்கப்பட்டது. புது முறையான இச்சீர்திருத்த திருமணத்தைக் கண்டு கிராம மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஒவ்வொருவரும் இத்திருமணம் நடக்கவேண்டுமென தங்கள் உவகையில் கூறினர். பி. ச. சவுந்திரபாண்டியனார் மகன் தோழர் நாகேசன் மணமக்களைப் பாராட்டிப் பேசினார். மணமக்களை நாமும் மனமாரப் பாராட்டுகிறோம்.

(நிருபர்.)

ஆரணியில் தோழர்கள் நெடுஞ்செழியன், நடராசனுக்கு வரவேற்பு

★

ஆரணி, டிச. 14—

12—12—53-ல், இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் சிறை சென்று மீண்ட தோழர்கள்: இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் ஆகியோருக்கு தோழர் ஏ. எல். சி. கிருஷ்ண சாமி தலைமையில் வரவேற்புப் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. பொருளாளர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.,: அவர்கள், அனைவரையும் பாராட்டியும், வெற்றும், ஆச்சாரியார் ஆட்சியின் அடக்குமுறை பற்றியும், பேசினர். அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும்முகத்தான் தோழர்கள்: இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் ஆகியோர், தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், நாங்கள் உள்ளே இருந்த போது கழகத்தைக் காத்து வளர்த்து பணி புரிந்தமைக்காக தோழர்களுக்கு நன்றி தெரிவித்தும் பேசினர்.

விருத்தாசலத்தில்

விருத்தாசலம், டிச. 14—

13—12—53 அன்று விருத்தாசலத்தில் சிறை மீண்ட தோழர் என். வி. நடராசனுக்கு பாராட்டும் வரவேற்பும் நடைபெற்றது. மாலை 5-மணிக்கு, தோழர் முனுசாமி இல்லத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு 'திராவிட நாடு திராவிடருக்கே! 'தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் வாங்கு!' தி. மு. க. தலைவர்கள் வாழ்க!' என்ற ஒலி முழக்கங்களுடன் பல தெருக்களின் வழியாகச் சென்று, திடலை வந்தடைந்தது. கூட்டத்திற்கு தோழர் ஜி சொக்கலிங்கம் தலைமை வகித்தார்.

தோழர்கள்: ம. பொன்னம்பலம், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., ஆகியோர் தோழர் என். வி. நடராசனைப் பாராட்டியும் கழகக் கொள்கைகளை விளக்கியும் பேசினர்.

அனைவருக்கும் நன்றி கூறியும், தூத்துக்குடி சதி வழக்கு பற்றியும், ஆச்சாரியார் ஆட்சியின் அவலங்களைப் பற்றியும், தோழர் என். வி. நடராசன் விளக்கவுரை ஆற்றினர். பல கிளைக் கழகங்கள் சார்பில் அவருக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

தூத்துக்குடியில் தலைவர்கள்

தோழர்களுடன் சந்திப்பு

திருநெல்வேலி, டிச. 16—

திருநெல்வேலி நீதிமன்றத்திற்கு, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, சி. வி. ராஜகோபால், திராவிடப் பண்ணை முத்துகிருஷ்ணன், எம். என். மணி, என். என். பி. லிங்கம் ஆகியோர் திங்கட்கிழமையன்று வந்திருந்து தூத்துக்குடி சதி வழக்கு விசாரணையைக் கவனித்தனர்.

தி. மு. கழகத் தலைவர்கள் கோர்ட்டுக்கு வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்த பொதுமக்கள் கோர்ட்டுக்கு முன்பு கூடிவிட்டனர். விசாரணை முடிந்தபின் தோழர்கள்: அண்ணாதுரை, நெடுஞ்செழியன் ஆகியோர், தோழர்கள் கே. வி. கே. சாமி, நடராசன் இருவரையும் சந்தித்துப் பேசினர்.

தலைவர்கள் நீதிமன்றத்தை விட்டு வெளியே வரும்போது, பொதுமக்கள் மலர்மாலைகள் அணிவித்தனர்.

ஜகஜீவன்ராம் வழிமறிக்கப்பட்டார்

போபால், டிச. 16—

இங்கிருந்து சுமார் 50 மைல் தூரத்திலுள்ள கரதல் லாகன்பூர் என்ற இடத்தில் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் கல்நாட்டு விழாவை நடத்தச் சென்ற போக்குவரத்து அமைச்சர் ஜகஜீவன்ராமை, சுமார் 100 பேர் வழி மறித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டம் கிசான் சபையைச் சேர்ந்தவர்களால் செய்யப்பட்டதென கருதப்படுகிறது. அங்குள்ள சர்மாவின் மந்திரி சபையை மாற்ற வேண்டுமென்றே இவர்கள் வற்புறுத்திப் பேசினார்கள்.

பிறப்பு

9—12—53— புதன்கிழமை இரவு மாயூரம் தோழர் சி. காந்தி அவர்களின் துணைவியார் சந்திரோதயம் ஓர் ஆண் மகவிற்கு தாயானார். தாயும் சேயும் நலம்.

மாயூரத்தில் கருணாநிதி

20-12-53 மாலை 6 மணிக்கு. மாயூரம் நகரப் பூங்காவில், தோழர் எஸ். என். குருமூர்த்தி அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும் அதுசமயம், தோழர் கருணாநிதி அவர்களும், தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ, கே. ஆர். சம்பந்தம், பி. ஏ., எம், எல். ஏ., வேலு, எம். எல். ஏ., முல்லை-சத்தி, ஆர். பழனிச்சாமி ஆகியோர் பேசுவர்.

குரும்பேரி தி. மு. கழகத் துவக்க விழா!

20—12—53 ஞாயிறு பகல் 2-மணிக்கு, தி. மு. கழகத் துவக்க விழாவும், 7-மணிக்கு, பொதுக்கூட்டமும் நடைபெறும். விழாவிற்கு தோழர் டி. அண்ணாமலை தலைமை தாங்குவார். தோழர்கள் அரங்கண்ணல், மா. மாரப்பன், க. நெடுஞ்சோழன், என். ஏ. சாமி ஆகியோர் பேசுவர். சி. ஆர். சுவாமிநாதன் இயக்கப் பண் பாடுவார்.

சென்னை கழகத் தோழர்களுக்கு

16-12-53 அன்று, சென்னை மீர்சாகிப் பேட்டையில் 'வள்ளுவர் வாசகசாலை'யின் சார்பாக நடப்பதாக இருந்த பொதுக் கூட்டத்தில், தி. மு. கழகத் தீர்மானப்படி விளம்பரம் செய்யப்பட்டிருந்த தோழர்கள் சி. பி. சிற்றரசு, வி. எஸ். கோவிந்தராசன் ஆகிய இருவரும் கலந்து கொள்ள முடியாமற் போயிற்று என்பதை கழகத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று சென்னை மாவட்ட செயலாளர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்.

தோழர் இராமனுதன்

இலங்கை சென்றிருக்கும் லயோலா கல்லூரி மாணவத் தோழர் இராமனுதன் டிச. 19, 20, 21, 27, 28 ஆகிய தேதிகளில் தி. மு. கழகக் கூட்டங்களிலும், மற்றும் பல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வார்.

சிங்கைத் தம்பி

தோழர் சிங்கைத் தம்பி அவர்கள் தி. மு. கழகச் சார்புடையவர்; கர்நாடகப் பகுதியிலுள்ள தமிழர்கள் அவரைப் பொதுக் கூட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள விழைவோர் கீழ்கண்ட முகவரிக்கு எழுதுக:—

சிங்கைத் தம்பி, 51, காளியம்மன் கோவில் தெரு, அலசூர்-பெங்களூர்.

திருத்தம்

'நம் நாடு' 13—12—53-ந் தேதி இதழில், தூத்துக்குடி வழக்கு நிதிக் கணக்கில், முதல் காலம் கடைசி பாராவில், சென்னை 9-வது வட்டத் தோழர்கள் பலரால் அளிக்கப்பட்ட ரூ. 16—4—3 என்றிருப்பதை, சென்னை 10-வது வட்டம் தோழமைக் கழக அன்பர்கள் என்று திருத்திப் படிக்க வேண்டுகிறோம்.

'தமிழ், ஆட்சிமொழியாதல் வேண்டும்'

★

தமிழ் மொழி ஆட்சிமொழியாக வேண்டுமென்பது பற்றி தோழர் கே. ந. பி. விசுவநாதம் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

"இப்போது நாம் நம் நாட்டிற்கென்று ஒரு ஆட்சி மொழியை அமைத்துக் கொள்ளாவிட்டால், இந்திய அரசின் அரசியல் சட்டப் பிரிவுகளின்படி பின்னால் பெருந்துயர் அடையும்படி நேரிட்டுவிடும்.

"நாட்டு மொழியே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்தவும், அம்மாதிரி ஒரு முடிவை நிறைவேற்ற தோழர் ஆ. கசபதி அவர்களால் மேல்சட்ட மன்றத்திலும், பிற அன்பர்களால் கீழ் சட்டமன்றத்திலும் கொண்டுவர இருக்கும் சட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று எல்லா சட்டசபை உறுப்பினர்களையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்வதற்கும், தமிழகத்தின் ஆட்சி மொழி மாநாடு 20—12—53 ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு சென்னை அண்ணாமலை மன்றத்தில் நடைபெற இருக்கிறது."

மாநாட்டிற்கு வந்திருந்து நல்ல முடிவுகளை நிறைவேற்றி மாநாட்டை வெற்றிபெறச் செய்து தங்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றி மகிழுமாறு வேண்டுகிறேன்.

"எதிர்ப்பை தளர விடமாட்டேன்"

டாக்டர் வரதாராசலு நாயுடு கூறுகிறார்

சென்னை, டிச. 12—

டாக்டர் பி. வரதராசலு நாயுடு எம். எல். ஏ, பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை விடுத்துள்ளார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"சென்னை மாநிலத்தில் எந்த சமூகத்தின் ஆதிக்கத்தையும், சர்வாதிகாரத்தையும் நான் எதிர்த்தே தீருவேன்; இப்படிப்பட்ட ஆதிக்கம் நிர்வாகத் துறையிலோ அல்லது புதுத் துறையிலோ இருப்பதை பத்திரிகைகளிலும், மேடைகளிலும் செய்யப்படும் பொய்ப் பிரசாரத்தைக் கண்டும், நடவடிக்கை எடுக்கப்படும் என்று மிரட்டுவதைக் கண்டும், நான் எதிர்ப்பதைவிட்டுவிடமாட்டேன். எவர் மீதும் எனக்கு வெறுப்போ, கெட்ட எண்ணமோ கிடையாது; ஆனால், காங்கிரசுக்காகவும், ஜனநாயகத்திற்காகவும் நான் பாடுபடுவேன்."

தூத்துக்குடி வழக்கு நிதி நாடகங்கள்!

★

பூந்தமல்லி கரையான் சாவடியில்
19—12—53 சனி இரவு 9 மணிக்கு
அண்ணாதுரை அவர்கள் தலைமையில்
எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினர் நடிக்கும்

'திருமணம்'

எனும் நாடகமும்
20—12—53 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு
அண்ணாதுரை அவர்கள் தீட்டியதும்
நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி நடிப்பதுமான

'காதல் ஜோதி'

எனும் நாடகமும் நடைபெறும்
கட்டணம்: ரூபாய் 5, 2, 1, அணா 8.

மழைவிட்டும் தூவானம் விடவில்லை

திருச்சி கழகத் தோழர்களின் இல்லங்களில் அதிகாரிகள் மிரட்டல்

சென்ற 7—6—53-ல், திருச்சி மலைக்கோட்டையில் பறந்து கொண்டிருந்த தி. மு. கழகக் கொடிகளை அவ்வட்டார காங்கிரசுத் தோழர்கள் பலாத்காரமாக, மரத்தில் பறந்துகொண்டிருந்த கழகக் கொடியை இறக்கி, கிழித்து, தீயிட்டுக் கொளுத்திய பிறகு, அது சம்பந்தமாக, திருச்சி நகரப் போலீசாரால் விசாரிக்கப்பட்டு, இறுதியில் திருச்சி நகர தி. மு. கழகத் துணைச் செயலாளர் ச. அருணகிரி மற்றும் மலைக்கோட்டை தி. மு. கழகக் கிளைத் தோழர்கள் மீது பழிசுமத்தப்பட்டு தொடரப்பட்ட வழக்கு ஒன்பது வாய்தாவுக்குப் பிறகு 10-வது வாய்தா 2—12—53 அன்று தோழர்கட்கு, தலா ரூ 20 அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் ஒரு வார சிறைதண்டனையும் விதிக்கப்பட்டது.

தோழர்கள் அபராதம் கட்ட மறுத்து, ஒருவார சிறை தண்டனையை ஏற்று சிறைபுகுந்தனர். தண்டனை அனுபவித்த பிறகு 8—12—53-ல் தோழர்கள் ச. அருணகிரி, முத்து, பஞ்சாபி கேசவன், கல்யாணசுந்தரம், நாராயணன், ரா. கிருட்டிண மூர்த்தி, சோ. கிருட்டிணமூர்த்தி ஆகிய 7 தோழர்களும் சிறை மீண்டனர்.

சிறை மீண்ட தோழர்கள் வழக்கம்போல், அவரவர்களின் வேலைக்குச் சென்ற சமயத்தில், 14—12—53-ல், அவர்கள் வீட்டில் (அபராதம் ரூ. 20 கட்ட மறுத்து சிறை தண்டனை அனுபவித்துப்) அபராதத் தொகைக்காக ஜப்தி வாரண்ட் சம்மன் பிறப்பிக்க போலீசார் வந்து தோழர்கள் வீட்டில் உள்ள தாய்மார்களிடம் பயமுறுத்திச் சென்றிருக்கிறார்கள். (ச. வி)

ஆசிரியருக்குக் கடிதம்

ஆட்சியாளர் கவனத்திற்கு!

ஆசிரியர்: 'நம் நாடு'
சென்னை.

ஐயா,

புகலூர் சுற்றுவட்டாரத்திலும், வேலூர், புதுப்பாளையம், பாண்டமங்கலம் ஆகிய ஊர்களிலும் பயிர் செய்யப்பட்டுள்ள வெற்றிலைக் கொடிகள் காய்ந்து அழிந்து கொண்டிருக்கின்றன. மண்ணிற்குள் படர்ந்து கிடக்கும் வெற்றிலைக் கொடி வேர்கள், ஏதோ ஒரு கிருமியால் அரிக்கப்பட்டோ, அன்றி வேறு காரணத்தாலோ அழுகிவிடுகின்றன. தானத்தின் மீது வளர்ந்து கிடக்கும் கொடிகள் உடனே பழுத்துக் காய்ந்துவிடுகிறது.

விவசாய இலாகாவினர் ஏதோ சாந்திக்காக சில இடங்களில் சில சமயங்களில் மருந்துகள் கொடுத்தார்களே தவிர, இக்காய்ச்சல் ஏற்படுவதற்கான மூல காரணத்தை பரிந்து அதை நிரந்தரமாகப் போக்குவதற்கான எவ்வழியையும் காட்டவே இல்லை.

இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்பு அம்மக்களுக்கு மாத்திரமின்றி, பொதுவாக எல்லாப் பொதுமக்களுக்கும் ஏற்பட்டிருக்கின்றது.

எனவே, சர்க்கார் காலந்தாழ்த்தாமல் இதற்கென ஒரு தனி ஆராய்ச்சியாளரை அனுப்பி, வெற்றிலைக்கொடி நோயை நிரந்தரமாகப் போக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இந்நோய் இங்கு மாத்திரம் என்றில்லாமல் தமிழ் நாட்டின் பலபாகங்களிலும் பரவியிருக்கிறது என்பதும், குறிப்பிடத் தகுந்ததாகும்.

டி. பி. மூர்த்தி,
தவுட்டுப்பாளையம்.

இலங்கை பாஸ்போர்ட் அலுவலகம்

சென்னையில் திறக்கப்பட்டது

சென்னை, டிச. 16—

இலங்கை சர்க்கார் தகவல் அறிவிப்பு பாஸ்போர்ட் காரியாலயம் இன்று சென்னையில் திறக்கப்பட்டது. மவுண்ட் ரோடு பாரத் கட்டிடத்தில் இக்காரியாலயம் இயங்கும். சென்னை காரியாலயம் பாஸ்போர்ட் தருவதுடன், இலங்கை சர்க்காருக்கும் சென்னை பத்திரிகைகளுக்கு மிடையே தொடர்பு ஸ்தாபனமாகவும் இருக்குமென்று இலங்கை ஐ கமிஷனர் பொது மக்கள் தொடர்பு செயலாளர் துரைசாமி தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (18, ஜூரிக் நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.